முருகப்பெருமான் துணை

**மகான் ஜமதக்னி அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

07.09.2021, செவ்வாய்கிழமை

1. மகா சக்திகள் துணை கொண்டு
மண்ணுலகை மீட்க வேண்டி
மகானாக அவதாரம் புரிந்தநல்
மாதவராசனே ஆறுமுக அரங்கனே
2. அரங்கனே உன் பெருமை கூறி
அகிலமதில் பிலவ யாளிதிங்கள்
வரங்களென இருபானீர்திகதி குசன்வாரம்
(பிலவ வருடம் ஆவணி மாதம் 22ம் நாள், 07.09.2021, செவ்வாய்கிழமை)
வழங்குவேன் துல்லிய ஆசிதனை
3. ஆசிதனை உலகநலம்பெற வேண்டி
அருளுவேன் ஜமதக்னி யானும்
ஆசிதந்து உலக மக்களிடை
அறமுடன் ஞானம் விதைக்கின்ற
4. விதைக்கின்ற ஞானியர் வழி
வின்னவர்கள் ஆசி தந்துமே
பாதுகாக்கின்ற மெய் ஞானவழி
பாடிடுவேன் உலகமக்கள் ஏற்று
5. ஏற்றுமே நாமசெபம் செய்து
ஏழாம்படை வீடு தன்னிலே
ஆற்றல்பட தீட்சைதனை அடைந்து
ஆறுமுக அரங்கனை குருவாகப்பணிந்து
6. பணிந்து நாம செபதபமுடன்
பக்குவம் தரும் தயவைபெருக்கி
துணிந்து அன்னதான சேவை
தேசமெங்கும் பரவச் செய்து
7. செய்துமே புண்ணியபலம் கூட
செயல்களெல்லாம் ஞானவழியாகி
மெய்யன்பர்கள் படை பெருகி
முழுமைபட யாவர்க்கும் சித்திக்கும்
8. சித்திதரும் அரங்க தவமே
சிவமோடு சுப்ரமண்ய ஞானம்
இத்தரையில் யாவர்க்கும் அருளிடும்
ஏழாம்படை வீட்டு தேசிகனே

9. தேசிகனே உன் சக்திவழி
தேசமெல்லாம் புதுமை பெற்று
ஆசிபட உன் தலைமைதன்னில்
அகிலம் அற்புதம் காணும்
10. காணவே சக்திமிகு ஞானம்
கந்த வேலன் தரும் வரமாக
தானாக உலகோர்க்கு சித்தி
தரணியெலாம் கண்டு சிறக்கும்
11. சிறக்கவே சித்தஞான வழியை
சிறப்பித்து மக்களுக்கு துணைபட
மறுக்கா மாற்றம் காணும்படி
மாதவசி அருளவாரீர் வாரீர்வாரீர் அரங்கன் சபைக்கு

துல்லிய ஆசி முற்றே

–சுபம்–